**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 329/2023 P.W.7/L.W7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ரமேஷ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ.செல்வமணி | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 24.09.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது மணவாளக்குறிச்சி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் வெள்ளிச்சந்தை காவல்நிலையத்தில் தலைமைகாவலராக பணிபுரிந்த போது 01.07.2023 ம் தேதி 20.15 மணிக்கு சூரப்பள்ளத்தைச் சார்ந்த தாணுப்பிள்ளை மகன் நீலகண்டபிள்ளை என்பவர் இராஜாக்கமங்கலம் பி.பி.எம் தனியார் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிட்சையிலிருப்பதாக போண் மூலம் கிடைத்த இன்றிமேசனைப் பெற்று 20.45 மணிக்கு மேற்படி மருத்துவமனைக்கு சென்றேன்.

2. மேற்படி மருத்துவமனையில் சிகிட்சையிலிருந்த நீலகண்டபிள்ளை என்பவர் கொடுத்த புகார் மனுவையும் இன்றிமேசனையும் பெற்று நிலையம் 21.30 மணிக்கு வந்து உதவி ஆய்வாளரின் உத்தரவு படி புகார் மனுவின் தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண் 92/2023 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 506 பத்தி இரண்டு இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணைச் செய்தார் .

**குறுக்கு விசாரணை** :

1. வழக்கு சம்மந்தமான தகவல் எங்களுக்கு 01.07.2023 அன்று 20.15 மணிக்கு கிடைத்தது. அன்றையதினம் இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரராகவும், அ.சா1 குற்றம் சுமத்தப்பட்ட நபராகவும் எங்கள் நிலையத்தில் குற்ற எண் 91/2023 ஆக பதிவுச் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. நான் இராஜாக்கமங்கலம் பி.பி.எம் மருத்துவமனைக்கு செல்லும் போது அ.சா1 சுயநினைவில் தான் இருந்தார் என்றால் சரிதான். என்னிடம் கொடுக்கப்பட்ட புகார் மனு யாரால் எழுதப்பட்டது என்றால் அ.சா1 தான் அவர் கைப்பட எழுதிக்கொடுத்தார். அ.சா1 என்னிடம் தந்த புகார் மனுவில் எந்த ஊரில் வைத்து சம்பவம் நடைபெற்றது என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் எதுவும் பெறவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையானது பதிவுச் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.